# வெள்ளி

எம்.ஜி.ஆர்
ஜெயலலிதா
மீண்டும்
இணைந்து
ஏன்?

## பெண்கள் கவனத்திற்கு சில விஷயங்கள்





சென்ற மாதம் --

எம்மோடிருந்தவர்;

நல்லவர்;

பண்பாளர்;

கடமையிலே தவறாத கண்ணியவான்;

கவிதையிலே உயிர் கண்ட

'மஹாகவி!'

இன்றும், இனிமேலும் --

அவர்தம் உயிரோடு கதைத்தல்

எமக்கு,


இயலுமன்றோ?

......................

இயலுமன்றோ!

# இவர்கள் ➳ ➳

# இணைந்தது ஏன்?



சினிமாத்துறையில் உள்ளவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றென்பது பேர் அப்பட்டமான அசல் சந்தர்ப்ப வாதிகள்.

அதிலும், சினிமா நடிகைகளைப்பற்றி சொல்லவே வேண்டாம்.

எல்லாமே இவர்களுக்கு ஒரு 'வேஷம்'தான்!

ஜெயலலிதாவும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

சென்ற தேர்தலின்போது தமிழ்நாட்டுப் பெரும் பெரும் பத்திரிகைகள் காமராஜரின் ''சின்டிகேட்'' டிற்கு ஆதரவாகச் செய்த பிரச்சாரங்களும், சில ''சவடால்'' பேர்வழிகளின் பேச்சுக்களும் ஜெயலலிதாவை 'தப்புக் கணக்கு' போடவைத்தன.

தேர்தலின்போது தி. மு. க. தோற்கும் என்பதும், 'சின்டிகேட்' காங்கிரஸ் ஜெயிக்கும் என்பதும் ஜெயலலிதாவின் கணிப்பு!

அப்படி நடைபெற்றால்,

'சின்டிகேட்' டிற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்த சிவாஜின் மார்க்கெட் உயரும் என்பதும், எம். ஜி. ஆரின் மார்க்கெட் விழும் என்பதும் இவரது நினைப்பு!

அதன் விளைவுதான்

தேர்தலுக்கு முன்னால் எம். ஜி. ஆரோடு சிறுசிறு 'மோதல்' களில் இவர் ஈடுபட்டு பலப் பரீட்சையில் இறங்கியது!

ஆனால்,

தேர்தலில் தி. மு. க. பெரு வெற்றி பெற்றதும், தி. மு. க வில் எம். ஜி. ஆருக்கு இருக்கும் செல்வாக்கை கண்டதும்,

நிபந்தனையின்றி சரணாகதி அடைந்துவிட்டார் ஜெயலலிதா!

இனி,

ஒருவேளை, 'வேண்டாம் போதும்' என்று எம். ஜி. ஆர் இவரோடு ஜோடி சேர்வதைத் தவிர்த்துக் கொண்டாலும் கொள்வாரே தவிர, ஜெயலலிதா ஒரு போதுமே எம். ஜி ஆரின் உறவைத் துண்டித்துக் கொள்ளத் துணியமாட்டார்!

தமிழகத்தின் இன்றைய மிகப் பெரிய பிரமுகர் 'எம். ஜி. ஆர்.' தானே!


கேள்வி - பதில்

?

அடுத்தபக்கம் திருப்புங்கள்!

✣ யாழ்ப்பாணம் மன்னார் பகுதிகளில் நிலத்திலும் கடலின் அடியிலும் எண்ணெய் வளம் இருப்பதாக சோவியத் நிபுணர் குழுவினர் கூறியிருக்கிறார்கள். இதற்கு முன்னர் பல தடவைகள் ஆராய்ச்சியை மேற்கொண்ட இஸ்ரேல், பிரெஞ்சு நிபுணர்களும் இதே கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், எப்போது இந்த எண்ணெய் வெளியே எடுபடப்போகிறது? அரசாங்கம் இந்த விஷயத்தில் அதிக அக்கறை செலுத்தாதற்கு காரணம் என்ன?

ஒவ்வொரு இதழிலும்
சிறந்த ஒரு
**கேள்விக்கு**
ரூ. 5/- பெறுமதியான,
ஈழத்து எழுத்தாளர்
எழுதிய நூல்கள்
**பரிசு** தரப்படும்

கேள்விகளை
அஞ்சலட்டையில் எழுதி
கீழே உள்ள முகவரியை
வெட்டி ஒட்டி
அனுப்புங்கள்!

கேள்வி – பதில்
"வெள்ளி"
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

✣ "நடிகைகளில் நீச்சல் போட்டி வைத்துப் பார்க்கட்டுமே, எனக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும்" என்று கூறியிருக்கிறார் புது நடிகை ஜெய்குமாரி, காலை 8 மணிக்கு நீச்சல் குளத்தில் குதித்தால், குறைந்தது நாலு மணி நேரமாவது இவர் நீந்துவாராம். புது நடிகையல்லவா, இதற்கெல்லாம் நேரம் கிடைக்கிறது! 'பிஸி' நடிகையாகிவிட்டால், இவருக்கு நீந்துவதற்கு நேரம் எங்கே கிடைக்கப்போகிறது!

✣ உள்ளூரில் தோன்றுகின்ற பல சிக்கல்களையும் தீர்க்க முடியாமல் நாம் தவித்து வருவதற்குக் காரணம் அந்நியச் செலவாணிப்பிரச்சினையே. கூடிய ஏற்றுமதி மூலம்தான் நாம் கூடிய அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க முடியும். இன்று நாம் பிரதானமாக தேயிலை, ரப்பர், தெங்குப் பொருட்கள் என்பவற்றையும், சிறிதளவு ஏலம், கராம்பு, கறுவா, போன்ற பொருட்களையும் ஏற்றுமதி செய்வதன் மூலமே அந்நியச்செலவாணியை சம்பாதிக்கின்றோம். இந்தப் பொருட்களின் ஏற்றுமதியை இன்னும் விஸ்தரிப்பது முடியாத காரியம், இவை தவிர்ந்த வேறு பல பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய வேண்டும், வாழைப்பழம் அன்னாசி, முந்திரிப் பருப்பு போன்றவற்றுக்கு வெளிநாடுகளில் ஏராளமானகிராக்கி இருப்பதை நாம் மறந்து விடக்கூடாது.

✣ நடிகர்களிலேயே துணிச்சலுடன் படுவேகமாக கார் ஓட்டும் நடிகர் பாலாஜி, ஆனால், எதற்கும் பயப்படாத இவர், லேசாக தலை வலித்தாலும் போதும், அந்த நோயாக இருக்குமோ இந்த நோயாக இருக்குமோ என்று பயந்து நடுங்குகிறார்.

★ ★ ★ ★ கட்டுரைப் போட்டி! ★ ★

ஈழத்து
எழுத்தாளர்களின்
புதிய
படைப்புகளில்
உங்களுக்குப்
பிடித்தது
எது?

# பரிசு ரூ. 200/

● 1-1-1945 க்குப் பிற[illegible] பிறந்தவர்கள் அனைவ[illegible] பங்கு பற்றலாம்.

● முடிவு திகதி: 20-9-19[illegible]

✣ உங்களுக்குப் பிடித்தமான சிறுகதை, கவிதை அல்லது கட்டுரை ஒன்றைப் பற்றி, ஏன் பிடித்திருக்கிறது என்ற காரணங்களை விளக்கி விமர்சித்து, புதுமையான முறையில் ஒரு கட்டுரை எழுதி அனுப்புங்கள்.

✣ நீங்கள் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ளும் விஷயம், 1-7-70ல் இருந்து 30-6-71 வரையுமுள்ள ஓராண்டு காலப் பகுதியில் ஈழத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை அல்லது புத்தகம் ஒன்றில் பிரசுரமானதாக இருக்கவேண்டும்.

✣ நீங்கள் எழுதும் விமர்சனக் கட்டுரையின் நீளம் 800 சொற்களுக்கு ('வெள்ளி'யில் சுமார் 4 பக்கங்கள்) உட்பட்டதாகவே இருக்கவேண்டும்.

✣ 1-1-45 தேதிக்குப் பின்னர் பிறந்தவர்களே இந்தப் போட்டியில் பங்கு பற்றலாம். வயதெல்லையை நிரூபிக்கும் பொருட்டு பாடசாலை அதிபர், கிராம சேவகர் அல்லது ஜே. பி. ஒருவரின் சான்றிதழை இணைத்து அனுப்பவேண்டும்.


✣ பரிசுத் தொகை ரூபா 100 ரொக்கப் பணமாகவும், ரூபா 100க்கு ஈழத்து எழுத்தாளரின் நூல்களாயும் வழங்கப்படும்.

✣ கட்டுரை கிடைக்கவேண்டிய கடைசித் தேதி 20-9-1971.

✣ தபால் உறையின் மீது 'வெள்ளி' ஜூலை, ஆகஸ்ட் மாத இதழ்கள் ஒன்றின் 30ம் பக்கத்தில் வெளியாகும் முகவரியையே வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

## பேசாத மொழியில் 'தினசரி'

இந்தியத்துணைக்கண்டத்திலே பல துறைகளில் பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன பல ஆண்டுகளாக ஆட்சிமொழியாயிருந்து வந்ததும், 'கற்றவர்' மொழியுமான ஆங்கிலத்திலோ, பலகோடி மக்களின் தாய்மொழியும் ஆட்சி மொழியாக மாறிக்கொண்டிருப்பதுமான இந்தியிலோ பல துறையிலும் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன என்றால் யாரும் வியப்படைய மாட்டார்கள். ஆனால். தமிழ்மக்களுள் சிலரால் வெறுப்புணர்ச்சி காரணமாக அல்லது அறியாமை காரணமாக 'செத்தமொழி' என்று சொல்லிக் கொள்ளப்படுகிற சமஸ்கிருதத்தில், சமயம், இலக்கியம், வைத்தியம், சோதிடம் முதலிய துறைகளில் மட்டுமல்லாது வாரந்தோறும், தினந்தோறும் வெளிவருகிற செய்திப் பத்திரிகைகள் கூட உண்டு என்றால் நிச்சயம் வியப்படைவார்கள்! இவற்றின் விலையோ மிக மிக மலிவு, ஆண்டுச்சந்தா நான்கு ரூபாவுக்கு ஒரு வாரப் பத்திரிகை நடத்த முடியுமா? நாகபுரியில் எம். ஏ. பட்டதாரிகள் மூவர் ''சமஸ்கிருத பவிதவ்யம்'' என்னும் வாரப்பத்திரிகையை வெளியிட்டு ஒரு சாதனையைச் செய்தார்கள். சென்ற ஜூலை மாதத்தில் இந்தச் சாதனை முறியடிக்கப்பட்டது. ஐந்து பைசா விலையில் (ஆண்டுச் சந்தா 18-00) சமஸ்கிருதத் தினசரிப் பத்திரிகையொன்றே வெளிவரத் தொடங்கியது சமஸ்கிருத தினசரிப் பத்திரிகை வெளியிட்டு அற்புதம் நிகழ்த்துபவர் மைசூரிலுள்ள பண்டிதர் வரதராஜ ஐயங்கார் என்பவர். பத்திரிகையின் பெயர் ''சுதர்மா''.



✣ ''பா'' வன்னாவில் தனக்கு அதிர்ஷ்டம் இருப்பதாக நினைத்து தொழில் செய்து வந்தவர் சினிமா டைரக்டர் பீம்சிங் இவருடைய தொழில் இப்போது படுத்துவிட்டது. இவரிடம் மட்டுமல்ல, இன்னும் ஏராளமான சினிமாக் காரர்களிடம் இப்படியான மூடநம்பிகைகள் நிறைய இருக்கின்றன!

✣ உலகம் முழுவதிலும் அரசாங்கங்கள் எல்லாம் வன விலங்குகளைப் பேணிப் பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டி வருகின்றன. இப் பாதுகாப்பு இல்லாவிட்டால் சில சமயங்களில் சில உயிரினங்கள் முற்றாக அழிந்தாலும் அழிந்துவிடும்! இலங்கையிலும் காடுகளிலுள்ள யானைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் மேலும் முயற்சிக்கவேண்டும் இல்லாவிட்டால் இலங்கையில் யானைகளே இல்லாது போய்விடும்!


✣ அழகான உடல் கட்டோடு இருக்க விரும்புகின்றவர்கள் அளவோடு சாப்பிட வேண்டும்! அடிக்கடி சாப்பிடாமல் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் சாப்பிடவேண்டும்!

✣ கேரளாவில் இருந்தும், இந்தியாவின் வேறு சில பகுதிகளில் இருந்தும், ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறிஸ்தவ கன்னி மாடங்களுக்கு பெண்கள் விலைக்கு விற்கப்பட்டதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி பெரும் பரபரப்பு ஏற்பட்டது! இது குறித்து, ஐரோப்பாவில் உள்ள கன்னிமாடங்களிலும், கிறிஸ்தவ பாதிரியார்களிடமும் விசாரிக்க ஒரு குழுவும், இந்தியாவில் உள்ள பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் ஆகியோரிடம் விசாரிக்க இன்னொரு குழுவும் நியமிக்கப்பட்டது. இந்த இரு குழுவினரும் அறிவித்த முடிவுகளை வத்திக்கானில் உள்ள போப் ஆண்டவர் அலுவலகம் ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டு இருக்கிறது. அந்த அறிக்கை இந்தப் பத்திரிகைச் செய்திகளை பொய்யானவை என்றும், மிகைப்படுத்தப்பட்டவை என்றும் நிராகரித்து இருக்கிறது.

✣ ஒரே ரக நெல்லை திரும்பத் திரும்ப பயிர் செய்தால் நிலத்தின் சத்து குறைவதுடன் விளைச்சலும் பாதிக்கப்படும். விவசாயிகள் இந்த மாதிரி விஷயங்களில் இனிமேல் அதிக அக்கறை செலுத்தவேண்டும்!

✣ மலையகத்தில் இப்போது ஏராளமான இளம் எழுத்தாளர்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்கள் ஒருவித துடிப்போடும் வேகத்தோடும் மிகவும் அற்புதமாக எழுதி வருகிறார்கள். தகுந்த வாய்ப்பும் வசதியும் கிடைத்தால் மிகவும் பிரமாதகப் பிரகாசிக்கக்கூடிய திறமை இவர்களிடம் இருக்கிறது. தட்டிக்கொடுத்து இவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது பெரியவர்களின் பொறுப்பு!

✣ நடிகர் சுந்தரராஜன் காரில் போகும்போது கோயில் கண்ட இடத்தில் எல்லாம் காரை நிறுத்தச் சொல்லி கும்பிடு போடுவார். அது கிறிஸ்தவக் கோயிலானாலும், இந்துக் கோயிலானாலும் ஒன்றுதான். ''எம்மதமும் சம்மதம்'' என்ற கொள்கை கொண்டவர் சுந்தரராஜன்.



✣ நாய் வளர்க்காத நடிகைகளில் ஒருவர் வாணிஸ்ரீ. அவர் வீட்டுக்குக் காவலுக்கான ஒரு நாயை யாரோ ஒரு திருடன் பிடித்துக்கொண்டு போய்விட்டான். திருடனை விரட்ட வேண்டிய நாயை ஒரு திருடனே திருடிக்கொண்டு போனால் எப்படி இருக்கும்? அது முதல் நாய் வளர்க்கும் ஆசையே போய் விட்டது என்கிறார் வாணிஸ்ரீ.

# பெண்களின் கவனத்துக்கு

## சி-ல-வி-ஷ-ய-ங்-க-ள்

சாமிஜி

இப்போதெல்லாம் பெண்கள் எந்தவிதமான வேலையையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

சில காலத்திற்கு முன்பு வரை சில தொழில்களும், சில விளையாட்டுக்களும் ஆண்களுக்கு மட்டுமே உரியவை என்று கருதப்பட்டு வந்தன. இந்தத்துறைகளிலும் கூட, இப்போது பெண்கள் மிகவும் தாராளமாகப் பிரவேசிக்கத் தொடங்கி விட்டார்கள்.

'ஆண்களுக்குச் சரிநிகர் சமானமானவர் பெண்கள்' என்ற நிலைமை படுவேகமாக உலகம் முழுவதிலுமே பரவிவருகிறது.

இவ்வளவு தூரத்திற்கு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றபோதிலும் 'பெண்மைக்கு அழகு செய்வது மென்மை' என்ற உண்மை இன்னமும் பொய்த்துப் போய்விடவில்லை!

'ஒரு வீட்டுத் தலைவியின் சிறப்பு இயல்புகளில்தான் ஒரு குடும்பத்தின் மனமகிழ்ச்சியும் வளர்ச்சியும் தங்கியிருக்கின்றன' என்ற தத்துவமும் இன்னமும் போய்விடவில்லை!

ஒரு வீடு செம்மையாக இருக்கவேண்டுமானால்,

அது,

அந்த வீட்டுத் தலைவியின் கையில்தான் தங்கியிருக்கிறது!

வீடு செம்மையாக இருக்க வேண்டுமானால்,

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் எப்போதும் சுமுகமான உறவு இருக்கவேண்டும்; அன்பும் காதலும் எப்போதும் நிரம்பி வழியவேண்டும்!

கணவனது அன்பையும் காதலையும் எப்போதும் காத்து வைத்திருப்பதற்காக மனைவி பல காரியங்களைச் செய்யவேண்டும்! இதை ஒரு கலையாகவே பயின்று பெண்கள் செயல்படவேண்டும்!

பல பெண்கள் இந்தக் கலையில் கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். சில பெண்களுக்கு இந்தக் கலைதெரியாத காரணத்தினால் அந்தக் குடும்பங்கள் கெட்டுச் சீரழிந்தே போய்விடுகின்றன.

இனி,

கணவனது அன்பைக் கவர்ந்து, குடும்பத்தைச் செம்மையாக நடத்துவதற்கு மனைவி செய்யவேண்டிய காரியங்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

**கவர்ச்சியும் அழகும்!**

கவர்ச்சியையும், அழகையும் பெண்கள் எப்போதுமே போற்றிப் பாதுகாக்க வேண்டும். இவற்றை விரும்பாத ஆண்கள் குறைவு. வயதான ஆண்கள் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல. எனவே, ஒவ்வொரு பெண்ணும் எப்போதுமே தனது கணவனுக்கு விருப்பமான கவர்ச்சியைக் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு நாளும் தன்னை அலங்கரித்துக் கொள்ளத் தவறவே கூடாது. அழகாகவும் சுத்தமாகவும் இருப்பவர்களுக்கு சமூகத்திலும் எப்போதுமே ஒரு தனி மதிப்புக் கிடைக்கத்தான் செய்கிறது.

அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்கவேண்டுமென்றால், ஆடம்பரமான முறையில் செலவுக்கு வழி வைக்கவேண்டும் என்று அர்த்தமல்ல! எளிமையும், சுத்தமுங்கூட ஒருவகையான அழகையும் கவர்ச்சியையும் தரவேசெய்யும் என்பதை பெண்கள் மறந்துவிடக்கூடாது!

வீட்டில் இருக்கும்போதும் சரி, வெளியே செல்லும்போதும் சரி கணவனுக்குப் பெருமை தரும் முறையிலேயே பெண்களின் ஆடைகளும் அணிகலன்களும் இருக்கவேண்டும். கணவனது ரசனை என்ன என்பதை அறிந்து அதற்கு ஏற்ற முறையிலேயே மனைவி நடந்துகொள்ள வேண்டும்.

**வெளியில் சுற்றும் கணவன்!**

வீட்டை அழகுபடுத்துவதிலும், சுத்தமாக வைத்திருப்பதிலும் மனைவி எப்போதும் கவனம் செலுத்திக்கொண்டே இருக்கவேண்டும். சில ஆண்கள், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், வெளியே சுற்றிக்கொண்டு திரிவதையே விரும்புவார்கள். இவர்கள் இப்படித் திரிவதற்குக் காரணம் — இவர்கள் விரும்பும் அமைதியும், ஆனந்தமும், புதுமையும் வீட்டில் கிடைக்காததுதான்!



✣ முழுக்க முழுக்க எம். ஜி. ஆரைத் தாக்கி ஜெயகாந்தனால் எழுதப்பட்டு 'கண்ணதாசன்' பத்திரிகையில் வெளிவந்த கதை 'சினிமாவுக்குப் போன சித்தாளு' என்பது! எம். ஜி. ஆரைக் கொலைசெய்ய முயன்றதற்காக சிறைவாசம் அனுபவித்து, இப்போது விடுதலையாகி வெளிவந்திடும் எம். ஆர். ராதா இந்தக் கதையை சினிமாவாகத் தயாரிக்க திட்டமிட்டு வருகிறார்! இதன் கதை, வசனம் டைரக்ஷன் பொறுப்பை ஜெயகாந்தனே கவனிப்பாராம்! எம். ஜி. ஆரினால் சிறைக்குப் போன எம். ஆர். ராதா மறுபடியும் எம். ஜி. ஆரை வைத்தே புகழ்தேடப் பார்க்கிறார்!

● ● ●

வீட்டை நிர்வகிப்பதில் மனைவி கூடிய கவனம் எடுத்து அமைதியும், ஆனந்தமும், புதுமையும் வீட்டில் கிடைக்கும்படி செய்து விட்டால் கணவன் வெளியில் சுற்றுவதையே விட்டுவிடுவான்.

## சமையல் முக்கியம்!

குடும்ப நிர்வாகத்தில் சமையல் கலையும் ஒரு முக்கியமான அம்சம்தான்! சமையல் கலையின் பக்குவங்களை தெரிந்து கொள்ளாதவள் சிறந்த மனைவியாகிவிட முடியாது, வசதியும் பணமும் உள்ள வீடுகளில் சமையல்காரர்களும், வேலைக்காரர்களும் இருக்கக்கூடும். இந்த வீடுகளில்கூட குடும்பத் தலைவிதான் சமையல் அறையை நிர்வகிக்க வேண்டும். குடும்பத்தவர்களின் ரசனை அறிந்து சமையலில் புதுமைகளைச் செய்து அவர்களை மகிழ்விப்பதோடு, நோய், நொடி வராமல் ஆரோக்கியமான முறையில் ஊட்டமுள்ள உணவைத் தயாரிப்பதற்கு குடும்பத் தலைவியே எப்போதும் சமையல் அறையை நேரடியாக மேற்பார்வை செய்தல்வேண்டும்.

## கிண்டலும் கேலியும்!

கிண்டலாகவும், கேலியாகவும் பேசுவது சில பெண்களின் இயற்கையோடு கலந்த சுபாவம். இத்தகைய பெண்கள் கணவனோடு தனித்து இருக்கும் போது தமாஷாகப் பேசிக் கொள்ளலாம்.

ஆனால்,

ஒரு போதுமே,

பிறர் முன்னிலையில் கணவனைக் கிண்டல் செய்து பேசக் கூடாது! அதுவும் பிற ஆடவர்களின் முன்னிலையில் தப்பித் தவறிக்கூட இப்படிச் செய்யவே கூடாது! பெண்கள் இப்படிச் செய்தால், நாளாவட்டத்தில், கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் பிணக்குகள் தோன்றுவதற்கு இது வழிசெய்துவிடும் என்று மனோதத்துவ அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். இந்தக் கூற்றில் நிறைந்த உண்மை இருக்கிறது. பெண்கள் ஒரு நாளும் இந்த உண்மையை மறந்துவிடக்கூடாது!

## பிறருடன் ஒப்பிடாதீர்கள்

சில பெண்கள் எப்போதும் தங்களது கணவரை பிற ஆடவர்களுடன் ஒப்பிட்டே பேசிக் கொண்டு இருப்பார்கள். "பார்த்தீர்களா, அவர் இப்போது எப்படிப்பட்ட வேலையில் இருக்கிறார்! இதோ இவர் ஒரு பங்களா கட்டிவிட்டார்! அதோ, அவர் ஒரு புத்தம் புதுக் கார் வாங்கிவிட்டார்! நீங்களும் இருக்கிறீர்களே?" என்பது போல இவர்களது பேச்சு அமையும். இப்படிப் பேசுவது ஒரு கெட்ட பழக்கம். இத்தகைய பேச்சுக்களினால் விளையும் நன்மை எதுவுமே கிடையாது. மாறாக மனக் கசப்புத்தான் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வரும். கணவனுக்குத் தன்னையறியாமலே ஒரு தாழ்வு மனப்பான்மை வந்து சேர்ந்துவிடும். இத்தகைய பேச்சுக்களை நல்ல குடும்பப் பெண்கள் ஒருபோதும் பேசவே கூடாது!

### சினம் வேண்டாம்

சில சமயங்களில்,

கணவனுக்கு அவனது அலுவலகத்திலோ அல்லது நண்பர்கள் மத்தியிலோ ஏதாவது சிக்கல்கள் தோன்றியிருக்கும்; இத்தகைய நேரங்களில் கணவனது மனநிலை சரியாக இல்லாது இருக்கலாம். இதன் காரணமாக அவன் வீட்டில் சிடுசிடுத்து நிற்கலாம்.

இத்தகைய சந்தர்ப்பங்களில்,

கணவன் சிடுசிடுத்தவுடன் மனைவியும் சினந்து நிற்கக் கூடாது! தன் பக்கத்தில் நிச்சயமாக நியாயம் இருக்கின்ற நேரங்களில் கூட கணவனுடன் மனைவி மல்லுக்கட்டிக்கொண்டு நிற்கக் கூடாது!


தனது நியாயங்களை கணவன் ஆறுதலாகவும். அமைதியாகவும் இருக்கின்ற நேரங்களிலேயே மனைவி அவனிடம் மிகவும் இதமாக கூறவேண்டும்!

### பாராட்டு "டானிக்"

ஒருவனுக்குக் கிடைக்கின்ற பாராட்டுக்களைப் போன்ற சிறந்த "டானிக்" உலகத்திலேயே வேறு எதுவும் இல்லை. கணவனது தொழிலைப்பற்றியும், அவனது பொழுதுபோக்குகள் பற்றியும், அவனது ஆசைகள்பற்றியும் மனைவி தெரிந்து வைத்திருக்கவேண்டும். கணவனது முயற்சிகளையெல்லாம் மனைவி வாயார, மனமார பாராட்டிக்கொண்டே இருக்கவேண்டும்! கணவன் தற்செயலாக அடுக்கடுக்காக ஏராளமான தோல்விகளைச் சந்தித்து தோல்வியின் அதல பாதாளத்தில் துவண்டு கொண்டிருக்கிற நேரத்தில்கூட, மனைவி தனது பாராட்டுக்களைச் சொரிவதைத் தவிர்க்கக்கூடாது!

### சோம்பல் கூடாது

சில பெண்கள் எப்போது பார்த்தாலும் சதா சோம்பி



✣ யாழ்ப்பாணத்தில் ஒரு நடமாடும் நூல் நிலையம் இருக்கிறது. தற்காலத் தமிழ் இலக்கியம் பற்றிய செய்திகளை அறிவதற்கு இந்த நூல் நிலையத்தைப் போன்ற சிறந்த இடம் வேறு எங்குமே கிடையாது; ஏராளமான விஷயங்களை தரம் பிரித்து, சீர்தூக்கி ஆராய்ந்து வைத்திருக்கும் இந்த நூல் நிலையம் எங்கே இருக்கிறது தெரியுமா? உடல் மெலிந்து கொண்டே போனாலும் உற்சாகம் வளர்ந்துகொண்டே செல்லும் ஒருவரின் மூளைக்குள்! அந்த மூளை யாருடையது? — ரசிகமணி கனக. செந்திநாதனுடையது!

இருந்துகொண்டோ அல்லது படுத்துக்கொண்டோதான் இருப்பார்கள். இப்படி இருப்பது படு கெடுதியான காரியம்.

இப்படி இருப்பதனுல்,

உளநூல் அடைப்படையில் அமைந்த, பலவிதமான மனவிகாரங்கள் தோன்றிவிடுவதோடு, உடல்நலமும் கெட்டுப் போகத் தொடங்கிவிடும்! பெண்கள் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். சுறுசுறுப்பாக இருக்கின்ற பெண்களுக்கு அழகும், கவர்ச்சியும், உடல் நலமும், மரியாதையும் தேடாமலே கிடைக்கின்றன!

**அடிக்கடி நோய்!**

பெண்களில் சிலர் எப்போதும் நோய்வாய்ப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். மனோதத்துவ ரீதியில் இதற்குச் சில காரணங்கள் உண்டு.

"அன்புக்காக ஏங்கும் பெண்களும், ஏதோ ஒரு குறைபாட்டை மறைக்க விரும்பும் பெண்களுமே இப்படி அடிக்கடி நோய்வாய்ப்படுகிருர்கள்! இத்தகைய பெண்கள் அவர்களது குடும்ப வளர்ச்சிக்கு பெரும் தடைக்கல்லாக இருக்கிருர்கள்!

மனதில் உறுதியும், உள்ளத்தில் உற்சாகமும் இருந்தால் இத்தகைய நோய்களை வெகு எளிதாகக் குணப்படுத்திவிடலாம். பெண்கள் நோயை விரும்பி வரவேற்கக்கூடாது.

சில பெண்கள் நோயை விரும்பி வரவேற்பதற்குக் காரணம் - தொடக்கத்தில் அவர்களுக்குச் சிறிது வெற்றி கிட்டுவதுதான்!

சில சமயங்களில்,

பெண்கள் நோய்வாய்ப்பட்டதும்,

அவள்மீது பாராமுகமாக இருந்த கணவன் அவள்மீது அக்கறை செலுத்துவான்; அவளைப் புறக்கணித்த பிள்ளைகள் அவளைக் கவனிக்கத் தொடங்குவார்கள்! இந்த ஆரம்ப வெற்றிகள் தான் சிலரது உள்ளத்தில் புகுந்து, அவர்களுக்குத் தெரியாமலே, அடிக்கடி நோய்வாய்ப் படுபவர்களாக அவர்களை ஆக்கிவிடும்! இந்த உண்மையை எல்லா உளவியல் அறிஞர்களுமே ஒப்புக்கொண்டு இருக்கிருர்கள்! எனவே பெண்கள் தங்களுக்கு ஏற்படும் நோய் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். தற்செயலாக நோய் ஏதாவது ஏற்பட்டால் விரைவிலேயே அதிலிருந்து விடுதலை பெற்று விடவேண்டும்!

**பொழுது பயனுள்ளதாக கழியட்டும்;**

ஒவ்வொரு பெண்ணுமே ஏதாவது ஒரு கலையில் வல்லவளாக முயற்சி செய்யவேண்டும். தங்களது தகுதியையும், வசதியையும் பொறுத்து இந்தக் கலைகளைத் தெரிவு செய்துகொள்ளலாம். இத்தகைய கலைகளில் ஈடுபாடு இல்லாவிட்டால்

அதனை வலுவில் பயின்று, தங்களது ஓய்வுப் பொழுதை இத்தகைய துறைகளில் செலவு செய்யப் பெண்கள் பழகிக்கொள்ள வேண்டும்! கலைகளில் ஈடுபாடு இருக்குமேயானால், அது ஓய்வுப் பொழுதை பயனற்ற தொல்லைதரும் வீண் பிரச்சினைகளில் செலுத்தவிடாது, ஆக்கபூர்வமானதாக்க உதவுகின்றது.

**'மனைவி'யாக இருக்கக்கூடிய கணவன்!**

— இந்தக் கட்டுரையை வாசிக்கும் பெண்களில் சிலர், பெண்களை என்றென்றும் ஆண்களின் அடிமைகளாக வைத்திருப்பதற்கான வழிகள்தாம் இவை என்ற முடிவுக்கு வந்தாலும் வரலாம்.

அவர்களுக்கு ஒரு வார்த்தை:

உண்மையிலேயே, குடும்ப வாழ்வு சிறப்பதற்கு இதுதான் செம்மையான வழி! வாழ்க்கையில் வெற்றிகண்டு, வளமிக்க குடும்பத்தோடு வாழும் அனுபவம் மிக்க பெண்கள் எல்லாரும் இந்த உண்மையை ஒப்புக்கொள்ளவே செய்வார்கள்!

உங்களுக்கு இந்தவழி பிடிக்காவிட்டால்,

நீங்கள் ஒன்று செய்யலாம்!

அது என்னவென்றால்,

'மனைவி'யாக இருக்கக் கூடிய கணவனை மணந்து வாழ்வதுதான்! ●



✣ விமானத்தில் பணிப்பெண்ணாக சேவை செய்துகொண்டிருக்கையில் சினிமாத் துறைக்கு வந்தவர் நடிகை காஞ்சனா. இவர் ஏராளமான கலர்ப் படங்களில் நாயகியாக நடித்துவிட்டார். இப்போதும் பல கலர்ப்படங்களில் நடித்துக்கொண்டு இருக்கிறார் 'கலர்ப்பட நாயகி' என்ற பெயர் இவருக்கு வெகு பொருத்தம்! 'கலப்பட நாயகி' அல்ல; 'கலர்ப்பட நாயகி!'

✣ கல்லூரி அதிபராக இருந்து யூ. என். பியினால் பதவி நீக்கம் செய்யப்பட்டவரும் இப்போது கூட்டாட்சிக் கட்சியினரால் கல்வி இலாகாவில் ஒரு பெரிய பதவியில் அமர்த்தி வைக்கப்பட்டிருப்பவருமான இரா. சிவலிங்கம் ஒரு எம். ஏ. பட்டதாரி. இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் பேச்சாளருங் கூட! இவர்மட்டும் அந்த நாட்களிலேயே தீவிரமாக அரசியலில் பிரவேசித்திருப்பாரானால் இப்போது ஒரு பெரிய தலைவராக விளங்கியிருப்பார்!

## எழுதுகி

### தாயா ? தாய்நாடா ?

நம்மைப் பெற்ற தாயை நாம் எவ்வளவு முக்கியமாகக் கருதுகின்றோமோ அவ்வளவு முக்கியமாக நமது நாட்டையும் நினைக்கவேண்டும். நாட்டின் சட்ட திட்டங்களை மதித்து பழகத் தெரியவேண்டும். நாட்டைத் தெய்வமாக மதித்தால் தான் நம் நாட்டுக்குச் சேவை செய்பவர்களாகக் கருதப்படுவோம். தாயைவிட, பிறந்த நாடே பெரிது.

'வசந்தா' நவரத்தினம்.
கொழும்பு - 12.

### சென்ற தேர்தலில் ....

சென்ற பொதுத் தேர்தலில் எமது நாட்டு வாக்காளருள் நூற்றுக்கு 85·2 விகிதமானோர் வாக்களித்தார்கள். இந்த வாக்களிப்பு விகிதம் இந்தியாவில் 57·93 ஆகவும், இங்கிலாந்தில் 72 ஆகவும், அமெரிக்காவில் 60·2 ஆகவும் இருக்கின்றது. 1956-ம் ஆண்டுத் தேர்தலில் இருந்து இந்த வாக்களிப்பு விகிதம் 66 விகிதத்திலிருந்து படிப்படியாக அதிகரித்து வந்துள்ள அதே நேரத்தில், நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

கொழும்பு-13 முல்லைவேந்தன்.

### 'சதாத்'தின் மகள்

எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தின் மகள் பட்டினியால் துடிதுடித்து இறந்தார்! இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த இப் பரிதாப சம்பவம் பற்றி எகிப்தில் அதிகம் விற்பனையாகும் "அல்அஹ்றம்" பத்திரிகை செய்தி வெளியிட்டு இருக்கிறது.

ஒவ்வொரு எகிப்தியனுக்கும் பென்சன் வழங்கும் திட்டம் பற்றி பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே எகிப்திய ஜனாதிபதி இக் குழந்தையின் கதையைச் சொன்னார். எந்த நபருக்கும் இனிமேல் இந்த நிலைமை ஏற்படுவதை தான் விரும்பவில்லை என்றும் அவர் சொன்னார். ஆனால் அந்தக் குழந்தை யார் என்ற விஷயத்தை அவர் வெளியிடவில்லை. ஆனால் 'அல் அஹ்றம்' பத்திரிகைக்காரர்கள் அவருடைய குழந்தைக்குத்தான் இப் பரிதாப சம்பவம் நிகழ்ந்தது என்பதை எப்படியோ கண்டுபிடித்து விட்டார்கள்! எல்லா நாடுகளிலும் பத்திரிகைக்காரர்கள் கெட்டிக்காரர்கள்தான்!

ஊரெழு. வை. கனகேஸ்வரன்

### ஏன் இந்த (அ)நாகரிகம் ?

காலம் மாறுகிறது; விஞ்ஞானம் வளருகிறது என்பது உண்மைதான்! அதற்காக நமது பண்பாட்டை மறந்து, பார்ப்போர் பரிகசிக்க நடப்பதைத்தான் சில பெண்கள் விரும்புகிறார்கள்; அலங்காரம் செய்வது கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், அலங்காரம் அலங்கோல

வாசகர் பக்கம்

மாகவும், அவலட்சணமாகவும் இருந்தால் விரும்பத்தக்கதல்ல! எக்காலத்திலும் நாம் தமிழ்ப் பண்பாட்டை மறந்து ஊரார் சிரிக்க நடப்பது நன்றல்ல!

நீர்வை. — 'கல்யா'

## 'டைப்பிஸ்ட்' வீராங்கனை

'டைப்பிஸ்ட்' டுகளுக்கான உலகப் போட்டி சுவிர்ச்சர்லாந்து நாட்டிலுள்ள பெர்னே என்ற நகரில் நடந்தது. குமாரி பிரிஜிட் கோல்பெக் என்ற பெண்மணி முதலாவதாக வந்து வீராங்கனை பட்டம் பெற்றார். இவர் ஒரு தவறுகூட இல்லாமல் பத்து நிமிடங்களில் 5290 எழுத்துக்கள் அடித்தார்! கிழக்கு ஜெர்மனியிலுள்ள கவிக்கா என்ற நகரத்தைச் சேர்ந்தவர் இந்த வீராங்கனை.

— ஜெ சின்னத்தம்பி

கொழும்பு-15.

# ருர்களே!

வாசகர் பக்கம்

## மரமஞ்சள்


மரமஞ்சள் என்று கூறப்படும் மருந்து இலங்கையில் கினிதும பகுதியில் அதிகம் வளருகின்றது. இது ஒரு கொடி இனத்தைச் சேர்ந்தது. அரசினர் வைத்தியசாலைகளில்கூட ஊசி மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நேரத்தில் அவித்துக் குடிக்கும்படி வைத்தியர்கள் சிபாரிசு செய்கிறார்கள். காயங்களால் உண்டாகும் ஏற்பு வலிக்கு இது ஒரு சிறந்த மருந்து. கினிதும பகுதியில் இந்த மருந்து மலிவாகக் கிடைக்கிறது.


இளவாலை. ஐ. பேர்னாட்,



எல்லோருக்கும் சொந்தமானவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம். இவர் போன்று உற்சாகமாகச் செயல்படும் எம். பீக்கள் மிகவும் குறைவு! பண்டிதரின் பொன்னான நேரம், பல சமயங்களில், சாதாரணமான சின்னஞ் சிறு தொகுதி விஷயங்களைக் கவனிப்பதில் மண்ணாகி விடுகிறது! சின்ன விஷயங்களைக் கவனிக்கச் சொல்லி, இவரது தொகுதி மக்கள் இவருக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது. இவர் ஒரு இனத்தின் பிரதிநிதி; தமிழ் மக்கள் எல்லாருக்கும் சொந்தமானவர்! சின்ன விஷயங்களைச் சின்ன மனிதர்களும் பெரிய விஷயங்களைப் பெரிய மனிதர்களும் கவனிப்பதுதான் அழகு! பல பெரிய விஷயங்கள் இவருக்காகக் காத்து இருக்கின்றன!

ஊர்காவற்றுறை, ச. இரத்தினம்.







✣ கட்டிடக் கலையில் வல்லவரான துரைராசா கலை உள்ளம் நிரம்பியவர்! இவரது ஆதரவு பெற்று வளர்ந்த நாடக மன்றங்களும் இலக்கிய முயற்சிகளும் ஏராளம்! எல்லாவற்றுக்கும் பிற நாடுகளை எதிர்பார்த்து நிற்கும் பழக்கத்தை ஒழித்து, சகல துறைகளிலும் ஈழம் தன்னிறைவு பெறவேண்டும் என்பதற்காக உழைக்கும் ஒரு சிலருள் இவரும் ஒருவர்! ஈழத்தில் தமிழ் சினிமாத் துறையையும் வளர்க்கவேண்டும் என்பதற்காக இவர் இப்போது இடைவிடாது உழைத்து வருகிறார். இவரது அக்கறை மிகுந்த மேற்பார்வையில் 'குத்துவிளக்கு' என்ற திரைப்படம் தயாராகி முடிவடையும் கட்டத்தை நெருங்கிக்கொண்டு இருக்கிறது. ஈழத்து தமிழ் சினிமாத் துறையைப் பொறுத்த மட்டில் இந்தத் திரைப்படம் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தும் என்று இந்தத் தயாரிப்பில் பங்கு கொண்ட எல்லாருமே கூறுகிறார்கள்! புதிய புதிய துறைகளில் புகுந்து வெற்றி பெறுவதற்கு அசாதாரணமான துணிச்சல் நிறைய வேண்டும்! இந்தத் துணிச்சல் துரைராசாவிடம் நிறைய இருக்கிறது! துணிவைத் துணைகொண்டு நிற்கும் துரைராசா வெற்றி பெறுவது நிச்சயம்!

✣ அழகாய் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றீர்களா? அப்படியானால் ஒரு விஷயத்தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஒருபோதுமே கோபம் கொள்ளாதீர்கள். சாந்தமே முகத்துக்கு அழகைத் தருகிறது. கோபப்படும்போது முகம் விகாரமடைகிறது. அடிக்கடி கோபப்படுகிறவர்களின் முகத்தில் அந்த விகாரமே நிலைத்துவிடுகிறது! ○ ●

✣ பிரிட்டனில் சென்று குடியேறுவோரின் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான பல சட்டங்கள் இப்போது அந்த நாட்டில் அடுக்கடுக்காகக் கொண்டு வரப்படுகின்றன. இந்தச் சட்டங்கள் அமுல் நடத்தப்படும் போது 'கறுப்பு நிறத்தவர்'களைத்தான் அதிகம் பாதிக்கின்றன. நாகரிகம் மிகுந்த பிரிட்டனிலும் கூட நிறத்துவேஷம் இருக்கத்தான் செய்கிறது! ○ ○ ●

✣ 'மல்லிகை' ஆசிரியர் 'டொமினிக் ஜீவா' உச்சி முதல் உள்ளங்கால்வரை ஒரு (ரஷ்ய) கம்யூனிஸ்ட்! ஆயினும், கலை இலக்கியம் சம்பந்தப்பட்ட விஷயம் என்று வந்துவிட்டால், கட்சி பேதங்களை மறந்து உற்சாகம் காட்டுபவர். இலக்கிய ஆர்வம் அவருடைய இரத்தத்தோடு ஊறிவிட்ட விஷயம். சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒரு தொழிலாளி, எந்தப் பல்கலைக்கழகப் படிகளையும் மிதிக்காமலே, தனது சுய முயற்சியால் ஒரு படிப்பாளியாக, அறிஞனாக, இலக்கிய வாதியாக ஆக முடியுமென்பதை நம்மிடையே நிரூபித்து நிற்பவர் இவர்; சமீபத்தில் கலைக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலத்துக்குப் பதிலாக அமைக்கப் பெற்ற 'இலங்கைக் கலாச்சாரக் கழக'த்தின் இலக்கிய ஆலோசகராக இவர் நியமிக்கப் பெற்றிருப்பது மிகப் பொருத்தம்! ஆழ்ந்த சிந்தனையும், கூரிய நோக்கும், இடைவிடாத முயற்சியும் இவரது இயல்புகள். மிக ஆர்வமுள்ள இவருடைய ஆலோசனைகளால் ஈழத்துத் தமிழிலக்கியம் நிச்சயம் பயனடையுமென்று எதிர்பார்க்கலாம்.





✣ அகில இந்திய அழகிப் போட்டிகளில் பெரும்பாலும் வடநாட்டுப் பெண்களே தெரிந்து எடுக்கப்படுகிறார்கள். தெரிந்து எடுக்கப்படும் வடநாட்டுப் பெண்களிலும் சிந்திப் பெண்கள்தான் பெரும்பாலோர்! இவர்கள் நல்ல நிறமாக இருக்கிறார்கள். அத்தோடு உடற் கட்டு, நடையழகு, ஸ்டைல் எல்லாம் இவர்களிடம் இருக்கின்றன! ○ ●

✣ நமது பெண்களுக்கு மிகவும் பிடித்தமான காரியம் என்ன?— அழகான சேலையும், நாகரிகமான நகைகளும் அணிந்துகொண்டு கோயிலுக்கோ அல்லது சினிமாவுக்கோ செல்வதுதான்! ஆனால் மேல் நாட்டுப் பெண்களுக்கு மிகவும் பிடித்தமான காரியம் என்ன தெரியுமா?— 99 வீதம் நிர்வாண கோலத்தில், கொளுத்தும் வெய்யிலில் கடற்கரையில் படுத்திருப்பது! ○ ○ ●

✣ ''பயோரியா'' என்ற பல் நோய் மிகவும் பொல்லாதது. இந்த நோய்க்கு ஊசி மருந்து எதுவும் கிடையாது. வியாதி மிகவும் முற்றி விட்டால் பற்களை பிடுங்கி விடுவதுதான் நல்லது. இல்லாவிட்டால் ஈறுகளில் உண்டாகும் சீழின் விஷம் இரத்தத்துடன் கலந்து உடல் நலத்தையே கெடுத்துவிடும். இந்த நோய் உள்ளவர்கள் உடனடியாக ஒரு பல் வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்!

✣ சோழர் காலத்து கோவில்கள் பற்றி எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் என்பவர் எழுதிய புத்தகம் ஒன்றை டெல்லியில் நடந்த விழா ஒன்றில் இந்திய நிதிமந்திரி சவான் வெளியிட்டு வைத்திருக்கிறார். இந்தப் புத்தகம் மிகவும் திறமையுடன் எழுதப்பட்டுஇருப்பதாகவும்பலரும் பாராட்டியிருக்கிறார்கள்.

✣ இன்று அணிந்து நாளை வீசி விடக்கூடிய புதுமையான உடைகள் இன்று பிரிட்டனில் பிரபலமடைந்து வருகின்றன.

பிரிட்டனில் உள்ள ஆண்களும் பெண்களும் இன்று பெரிதும் விரும்பி நாடும் இந்த உடைகள் கடுதாசி போன்றவை. எனினும் கடதாசியிலும் பார்க்க மிகவும் உறுதியானவை.

✣ முன்னாள் மலேசியப் பிரதமரும், தற்போது இஸ்லாமியச் செயலகத்தின் செயலாளராக இருப்பவருமான துங்கு அப்துல் ரஹ்மான் ''பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்களை உள்நாட்டு விவகாரமாகவே கருதுகிறோம். எனவே அதில் நாம் தலையிடும் எண்ணம் கிடையாது'' என்று கூறியிருக்கிறார்! அப்பாவியான பல லட்சக்கணக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்படும்போது ஒதுங்கி இருப்பது நீதி ஆகுமா?

✣ யாழ்ப்பாணத்திலுள்ள கீரிமலையில் **Cisir Research Demonstration Training Project** என்ற தாபனம், பனங்கட்டித் தொழிற்சாலையொன்றை ஆரம்பித்திருக்கிறது. இங்கு தயாரிக்கப்படும் பனங்கட்டி வழக்கமான பனை ஓலைக் குட்டான்களில் இல்லாமல், கனவடிவக் கட்டிகளாகத் தயாரிக்கப்பட்டு ஒயில்பேப்பரினால் சுற்றி மடிக்கப்பட்டிருக்கிறது. இது கொஞ்சமும் கவர்ச்சிகரமாக இல்லை! உள்ளேயிருக்கும் பனங்கட்டி ருசியாக இருக்கிறது. ஆனால், இந்தக் காலத்தில் வெளி அழகு இல்லாவிட்டால் எதுவுமே எடுபடாதென்பதை இதில் சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்க வேண்டும்!

✣ தென் அமெரிக்காவில் உள்ள அர்ஜென்டைனாவில் ஒரு பெரிய பாறையில் சரிவான நுனிப் பகுதியின் மீது 700 தொன் எடையுள்ள மாபெரும் பாறை ஒன்று தொத்திக் கொண்டு நிற்கிறது. இந்தப் பிரம்மாண்டமான பாறையை ஒரு சிறு பையன் கூட அசைத்து ஆட்டிவிடலாமாம். ஆனால் இது ஆடுமே தவிர நுனியில் இருந்து சிறிதும் பிறழ்வதே இல்லையாம்.

# ஸ்ரீதரும் சாந்தாராமும்

'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தை தயாரித்து வெளியிட்டிருந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீதர், சாந்தாராமைச் சந்தித்தார்.

தன்னை சாந்தாராமுக்கு ஸ்ரீதர் அறிமுகப்படுத்திக் கொண்டபோது, அவரைப் பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டு இருப்பதாக சாந்தாராம் கூறினார்.

'நெஞ்சில் ஓர் ஆலயம்' ஒரே செட்டில் படமாக்கப்பட்ட விதத்தை ஸ்ரீதர் விவரித்தபோது, சாந்தாராம் அந்தப் படத்தைப் பார்க்க விருப்பம் தெரிவித்தார்.

சாந்தாராம் அந்தப் படத்தைப் பார்த்த பின்னர் ''இந்தப் படத்தை நீங்கள் ஏன் இந்தியில் தயாரிக்கக்கூடாது'' என்று கேட்டார்.

''அப்படி ஒரு அபிப்பிராயம் இருக்கிறது'' என்று ஸ்ரீதர் சொன்னபோது, ''அப்படியானால் அந்தப் படத்தில் நீங்கள் யாரை நடிக்க வைக்கப் போகின்றீர்கள்'' என்று சாந்தாராம் கேட்டார்.

''திறமையுள்ள புகழ்மிக்க இந்தி நடிக நடிகையரைத்தான் ஒப்பந்தம் செய்யலாமென்று இருக்கிறேன்'' என்றார் ஸ்ரீதர்.

''அங்குதான் நீங்கள் தவறு செய்கிறீர்கள். நானாக இருந்தால் தமிழில் நடித்த அதே நடிக நடிகையரையும், தமிழில் இசை அமைத்த அதே இசை அமைப்பாளரையும்தான் போட்டு அந்தப் படத்தை இந்தியில் தயாரிப்பேன்'' என்றார் சாந்தாராம்.

''நீங்கள் சாந்தாராம், உங்களால் அப்படிச் செய்ய முடியும்'' என்றார் ஸ்ரீதர்.

''ஸ்ரீதர் 'சாந்தாராம்' ஆவதற்கு இதுதான் சுலபமான வழி'' என்றார் சாந்தாராம் சிரித்துக் கொண்டே!

✣ ''என் கணவரும், மற்ற கணவன்மார்களைப்போல, நல்ல உத்தியோகம் பார்த்து குடும்பத்தைச் சற்று வசதியாக நடத்த பணம் சம்பாதித்து வந்திருந்தால் நானும் என் குடும்பத்தை சந்தோஷமாக நடத்தி வந்திருப்பேன். சினிமாவின் பக்கமே தலைகாட்டியிருக்கமாட்டேன்'' என்று கூறியிருக்கிறார் சௌகார் ஜானகி. அவர் விருப்பியது போல ஒரு 'சிறந்த' கணவர் அவருக்குக் கிடைத்திருந்தால், தமிழ் சினிமா உலகம் தன்னிடமுள்ள ஒரே ஒரு சிறந்த நடிகையையும் இழந்திருக்கும்!



# அவன் அவள்

# ஒரு தனி பங்களா

அவள் பஸ்ஸிலிருந்து இறங்கி இரண்டு பக்கமும் அடுக்கடுக்காக 'செரி' மரங்கள் வளர்ந்திருந்த பாதை வழியாக, அந்தத் தென்னந் தோட்டத்தின நடுவில் இருந்த பங்களாவை நோக்கி நடந்து வருவதை, அந்தப் பங்களாவின் கிழக்குப் பக்கத்தில் இருந்த ஜன்னலின் ஊடாக, அவன் பார்த்துக் கொண்டு நின்ருன்.

சிகரெட் அவனது விரல்களைச் சுட்டது. அதை 'ஆஷ்ட்ரே' யில் தேய்த்துவிட்டு, புதிதாக ஒன்றை உருவி, பற்ற வைத்துக்கொண்டான்,

அவளுக்கும் பங்களாவுக்கும் இடையில் இருந்த தூரம் வர வரக் குறைந்து கொண்டுவந்தது

**சுகுமாரன்**

அவளது நடையில் ஒரு அழகும் ஒயிலும் மிதந்தன.

அவள் பார்ப்பதற்கு அழகாக இருந்தாள்.

அளவு அளவான சதைகள் வேண்டிய வேண்டிய இடங்களில் மட்டும் வளர்ந்து இருந்தன. ஐந்து அடி ஐந்தரை அங்குல உயரம். நிமிர்ந்த, இளமை தெறிக்கும், 'மோல்டி'ல் வார்த்தது போன்ற உடல், எலுமிச்சம்பழ நிற மேனி. கண்களின் நிறம் நீலம் கலந்த ப்ரௌன். அந்த நிறம் மேனியின் நிறத்தை ஜொலிக்கப்பண்ணிக்கொண்டு இருந்தது. கருமை செறிந்த அடர்ந்த, அழகாக வாரி அலங்கரிக்கப்பட்ட கூந்தல். அதை மடித்து இரண்டாகக் கட்டியிருந்தாள். வடிவத்துக்கு வடிவு கூட்டும் முறையில் 'லைட்'டாக 'லிப்ஸ்டிக்' தடவிய, பார்த்தவுடன் கண்களை ஈர்க்கும் உதடுகள்.

கை இல்லாத,

ஒரு 'சைட்'டில் 'ஜிப்' வைத்த,

ஸாரிக்கு 'மாட்ச்' ஆகக்கூடிய ரவிக்கை.

'ஜிப்' இறுக்கிப் பிடித்துக் கொண்டு இருந்தது.

ஸாரியை இடுப்பில் பதித்து, சரித்துக் கட்டியிருந்தாள்.

அதைப் பார்த்தபோது அவனது மனசும் சரிந்தது.

பங்களாவில், இருந்த 'பொமெனேரியன்' அவளை வர வேற்க வாசலுக்கு ஓடியது.

படிகளில் அவள் ஏறத் தொடங்கினாள்.

ஒரு விதமான செல்லத் துள்ளலுடன், அவள் கால்களை இடறுவது போன்று, 'பொமெனேரியன்' அவளை சுற்றிச் சுற்றி ஓடியது.

அது ஸாரியைக் கிழித்து விடப் போகிறதே என்ற பயத்தில் அவள் ஸாரியை ஒரு சிறிது தூக்க, சிவந்த அந்தப் பாதங்களும், அதற்கு மேலே தெரிந்த, தந்தத்தில் கடைந்தது போன்ற கணுக்கால்களும்......

அவன் சிகரெட்டை ஒரு முறை நன்றாக இழுத்து அனுபவித்து கப கபவென்று புகையை வெளியே விட்டான்.

அவள் உள்ளே நுழைந்த போது,

அவன்தான் முதலில் அவள் கண்களுக்குத் தெரிந்தான்.

முகத்தைச் சுழித்துக் கொண்டாள்.

'சுழிக்கிறாயா, இரு பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று நினைத்துக் கொண்டான் அவன்.

அவள் முகத்தை மறுபுறம் திருப்பினாள்.

கடைசியாக,

சென்ற வாரத்தில்,

அந்த மாடிப் படிக்கட்டுகளின் அருகில்,

அவன் நடந்துகொண்ட முறை—


'குபுக்'கென்று அவளது நெஞ்சில் குமட்டியது!

ஆத்திரம் அவசரமாக அவள் கண்களில் பரவி, விரிந்தது.

அது அவனுக்கும் தெரிந்தது.

'நீ ஆத்திரப்பட்டால் எனக்கென்ன? அழகாக இருக்கிறாய்; இளமையாக இருக்கிறாய். தொட்டவுடன் பாயும் 'பிக் அப்' கூடிய புது 'ஃபோக்ஸ் மாதிரி' —அவனுக்கு ஃபோக்ஸில் ஒரு பிரேமை—'அது போதும்' மனசுக்குள் அனுபவித்துக் கொண்டான் அவன்.

'இந்த ஃபூல் இன்றைக்கும் இங்கு வந்துவிட்டானே' என்று நினைத்தாள் அவள்.



அவன் ஒரு விஷஜந்து என்பது முதலில் அவனது பார்வைகள் மூலமாகவும், பின்னர் அவனது பல் இளிப்புக்கள் மூலமாகவும் அனுபவத்தினுல் அவள் கற்றுக்கொண்ட உண்மை.

'இவனுடைய வாலை ஒருநாளைக்கு ஒட்ட அறுக்கவேண்டும். அருமையான அந்த அம்மாவுக்கு இப்படியான ஒரு தம்பி வந்து வாய்த்தானே' என்று நினைத்தாள் அவள்,

அவளின் நினைப்பு அவனுக்குத் தெரிந்தது,

மனசுக்குள் சிரித்துக்கொண்டான்.

அவளை வரவேற்றுக் கூட்டி வந்த 'பொமனேரியன்' அவனிடம் வந்தது.

அவள் வந்த வாசலிருந்து,

இடது பக்கமாக,

பன்னிரண்டு அடிதூரத்தில்,

ஒரு 'பெட்ரூம்'.

அந்த அறையில் ஒரு அலுமாரி.

அலுமாரிக்குப் பக்கத்தில் 'ஹீட் கொன்ட்ரோல'ருடன் கூடிய ஒரு 'எலட்ரிக் ஹீட்டர்'

அதில் ஒரு எவசில்வர் கேத்தல்.

கேத்தலில் வெந்நீர் கதகதத்துக்கொண்டிருந்தது.

பகசுத்தில் ஒரு பேஸின்.

அந்த அறைக்குள் நுழைந்து,

கைப் பையில் 'சிரிஞ்'சை எடுத்து வெந்நீரில் கழுவி, அலுமாரியைத் திறந்து அதிலிருந்த குப்பியை எடுத்து, மருந்தை 'சிரிஞ்'சில் நிரப்பி, ஒரு 'இன்ஜெக்ஷன்' போடுவதற்கு இன்னும் வேறு என்னென்ன ஆயத்தங்கள் செய்யவேண்டுமோ அவ்வளவையும் செய்துகொண்டு அந்த அறையிலிருந்து திரும்புவதற்கு அவள் எடுத்தது இரண்டே நிமிடங்கள்!

கடந்த இரண்டு மூன்று வாரங்களாக, அந்த நேரங்களில் அவள் வரும் போதெல்லாம் கிழவர் அந்த அறையில் இருப்பதில்லை.

''வெய்யில் அகோரமாக இருக்கிறது பெண்ணே, என்னுல் தாங்க முடியவில்லை'' என்பார். பங்களாவுக்குப் பின்புறத்தில் இருந்த வேப்பமரத்து நிழலும் தென்னங்கீற்றுக் கொட்டகையும்தான் அருமையாக இருக்கின்றன என்று சொல்லி கிழவர் அங்கே படுத்திருப்பார்.

அவருக்கு 'ஈஸிசேர்' தான் பிடிக்கும்.

'டெயிலி நியூஸ்' பத்திரிகையை தலைப்புச் செய்திகளிலிருந்து 'ஸ்போர்ட்ஸ் கொலம்' வரைக்கும், அச்சிட்டுப் பிரசுரித்த நிறுவனத்தின் பெயர் வரைக்கும், ஒரு வரி விடாமல், பத்துத் தடவைகள் படித்து முடித்து விட்டு, அவள் போகும் போது பதினேராவது தடவையாக மேய்ந்து கொண்டு இருப்பார்.

அவளைக் கண்டதும் புதினம் எல்லாம் விசாரிப்பார். அன்பாக ஆறுதலாக விசாரிப்பார்; ஒரு 'மூட்' வந்து விட்டால் கிண்டல், கேலியிலும் இறங்கி விடுவார்.

மாத முடிவில் அவர் தரும் 'செக்'கும் தாராளமானதாகவே இருக்கும்.

அவளுக்கு அவரை நன்கு பிடிக்கும்.

''பாவம் எப்படி இருந்தவர் எப்படி ஆகிவிட்டார்! நல்ல மனுசன், குழந்தைமாதிரி. கடவுளே இவரைச் சீக்கிரம் குணமாக்கி விடு'' என்று அவ

ரைக் காணும் போதெல்லாம் அவள் மனசுக்குள் நினைப்பது வழக்கம்.

அவருடைய மனைவியையும் அவளுக்கு நன்கு பிடிக்கும். அவளும் அந்த தென்னங்கீற்றுக் கொட்டகையிலே தான் இருப்பாள். அங்கிருந்து பார்த்தால் சமையலறையின் பெரிய ஜன்னல் தெரியும். அங்கே, வேலைக்காரி சமைத்துக் கொண்டு இருப்பாள், பையன் ஒருவன் கூடமாட ஒத்தாசையாக ஏதாவது செய்து கொண்டிருப்பான்.

'வாட்ச்மன்' ஏதாவது தேவையிருந்தால் அங்கு வருவான். இல்லாவிட்டால் தோட்டத்தில் எங்காவது சுற்றிக் கொண்டு இருப்பான்.

இரவில் மட்டும் அவிழ்த்து விடப்படும் இரண்டு 'அல்சேஷன்'களும் அந்தக் கொட்டகையில்தான் கட்டி நிற்பது வழக்கம்.

கடந்த ஆறுமாதகாலமாக, ஒருநாள் விட்டு ஒருநாள், அவள் அங்கு வந்துபோகிறாள்.

அந்த இடம் அவளுடைய சொந்த வீடுமாதிரி ஆகிவிட்டது. இன்றைக்கும்,

கிழவர் தென்னங்கீற்றுக் கொட்டகையில்தான் இருக்கிறார் என்ற நினைப்பில், அவள் பங்களாவின் பின்புறத்தை நோக்கி நடந்தாள். இரண்டு பெட்ரூம்கள், ஒரு பாத்ரூம், ஒரு ஸ்டோர் ரூம் என்பவற்றைக் கடந்து அவள் நடந்த போது—

பின்புறத்துக்குச் செல்வதற்கான கதவு

சாத்தப்பட்டு,

பூட்டப்பட்டு இருந்தது!

அந்த பங்களாவில் ஒருவித அமைதி — பயங்கரமான ஒரு



✣ பதிபக்தி, பாலும் பழமும் படகோட்டி, பணத்தோட்டம், கலங்கரை விளக்கம், குடியிருந்த கோயில் போன்ற பல வெற்றிப் படங்களை தயாரித்த வேலுமணி, "நம்ம வீட்டுத் தெய்வம்" என்ற படத் தயாரிப்போடு டைரக்டராகவும் மாறிவிட்டார். கே. ஆர். விஜயா கதாநாயகியாக நடித்திருக்கும் இந்தப் படத்தை வேலுமணிதான் டைரக்ட் செய்திருக்கிறார். பணத்தைச் செலவு செய்வதிலும், நஷ்டம் ஏற்பட்டால் கவலைப்படாது இருப்பதிலும் வேலுமணி கெட்டிக்காரர்! இப்போது பணக்காரராக இருக்கும் வேலுமணி, இந்தப் பணத்தைச் சம்பாதிப்பதற்குப் பட்ட கஷ்டம் அவரது மனைவிக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாகும்!

✠ ✠ ✠ ✠ ✠

அமைதி—நிலவுவதை அவள் அப்போதுதான் உணர்ந்தாள்.

நெஞ்சில் பயம் கப்பென்று பிடித்துக்கொண்டது.

நெற்றியில் வியர்வை துளிர் விடத் தொடங்கியது.

திரும்பி ஓடினாள்.

அங்கே—

முன்புறத்து வாசல்கதவை பூட்டி விட்டு திரும்பி நின்றான் அவன்!

ஒரு கணத்தில் அவளுக்கு எல்லாமே புரிந்து விட்டது.

பக்கத்தில் இருந்த ஸோபா வில் 'சிரிஞ்'சையும் ஸ்பிரிட் போத்தலேயும் போட்டுவிட்டு டெலிபோன் இருந்த மேஜை யை நோக்கி ஓடினுள்.

'சிரிஞ்' ஒரு அரைவட்டம் போட்டுவிட்டுஸோபாவிலேயே கிடந்தது. ஸ்பிரிட் போத்தல் பூரணமாக உருண்டு, நிலத்தில் விழுந்து, படீரென்று உடைந் தது.

ஸ்பிரிட் நெடி அந்த இடம் முழுவதும் பரவியது.

அவள் 'ரிஸீவ'ரைக் கையில் எடுத்து 'டய'லேச் சுழற்றுவதற்கு முன்னுல், பாய்ந்து வந்து அவள் கையிலி ருந்த 'ரிஸீவ'ரைப் பிடுங்கினுன் அவன்.

அவள் அவனிடமிருந்து விலகி இந்தப் பக்கமாக ஓடி னுள்.

அவன் பிடிக்க முயன்று ஸாரியின் நுனி வழுவியது, அவன் கையிலிருந்தும்; அவள் தோளிலிருந்தும்.

அவன் கண்களில் மின்னி யது வெறி. அவள் கண்களில் மின்னியது பயம் கலந்த கோபம்.

''நீ கூச்சல் போடலாம் என்று நினைக்காதே. இந்த எஸ் டேட்டிலேயே யாரும் கிடை யாது'' என்ருன் அவன்.

''பொலீஸ் உன்னேச் சும்மா விடாது'' என்ருள் அவள்.

அவனுடைய பொழுது போக்கு தமிழ்சினிமா அல்ல பெண்கள்! எனவே அவன் கட கடவென்று சிரிக்கவில்லே.

அவளேக் கண்களால் அனு பவித்துக்கொண்டு நின்ருன்.

''தப்ப முடியாது'' என்ருன்

'எப்படித் தப்பலாம்' என்று யோசித்தாள் அவள்: 'அவனுடைய தலேயில் போடு வதற்கு ஏதாவது அகப்படுமா' என்று பார்த்தாள். பூக்கள் நிரப்பியிருந்த ஜாடி கூட அவ னுக்குப் பக்கத்தில் தான் கிடந் தது.

''என்னுடைய 'பிளான்' அட்சரம் பிசகாமல் வேலே செய் கிறது. இணங்கிவிடு. அவர்கள் வர இன்னமும் நான்கு மணி நேரம் செல்லும். நான்தான் போய் அவர்களேக் கூட்டி வர வேண்டும்'' — பேசிக்கொண்டே மெதுவாக ஒவ்வொரு அடியாக முன்வைத்து அவன் நடந்து கொண்டிருந்தான்.

அவள் கைகளே தொய்ந்த நிலேயில் வைத்துக்கொண்டாள். விரல்கள் விரிந்த நிலேயில் இருந் தன. விரல்களேயும் சோர்வான நிலேயில் வைத்துக்கொண்டாள். எங்கோ படித்தது அவளுக்கு நினேவுக்கு வந்தது.

'மூஞ்சியில்தான், கண் குரு டாக்கும்படியாக அடிக்கவேண் டும்-நகத்தால் கிழித்துக் குதறி விடவேண்டும்''

அவளால் போட முடிந்த திட்டங்கள் அவ்வளவுதான்.

''வாட்ச்மனேயும் அனுப்பி விட்டேன்'' என்ருன் அவன்.

அவள் பதுங்கினுள். பாய் வதற்குத் தயாராக.

அவன் இரண்டு அடிகள் முன்வைத்து,

அவளே அணேக்க நெருங்க,

அவள் மின்னல் வேகத்தில் பாய,

அவன்,
நெளிந்து
வளேந்து
குனிந்து
திரும்பி

லாவகமாக அவள்து வலது மணிக்கட்டைப் பற்றி, வேகத்தோடு வளேத்து,

அதனே அவளது முதுகுப் புறம் கொண்டு சென்றபோது அவளது பூட்டுக்கள் பெயர்ந்து விடுவது போன்று வலித்தன!

அவனது முகம் அவளது தோள்பட்டைக்கு மேலாக அவளது முகத்துக்குச் சமீபமாக, மிகச் சமீபமாக, மிக மிகச் சமீபமாக நெருங்கிய அதே கணத்தில், அவனது இடக்கரம் பிளவ்ஸுக்கும் ஸாரிக்கும் இடைப்பட்ட அந்தப் பிரதேசத்தில் சீண்டியது.

அவளது கண்களில் நீர் பொல பொலத்தது. முகத்தை மறுபுறம் திரும்ப முயற்சித்தவாறே "சீ ...ராஸ்கல்...... இதற்கெல்லாம் நீ பதில் சொல்ல மேண்டியிருக்கும் தப்ப முடியாது" என்ருள்.

"வாடா. வா, பேசவேண்டியதை எல்லாம் அப்புறம் பேசிக்கொள்வோம்" என்றபடியே அவளேயும் இழுத்து அணேத்தபடி ஸோபாவில் உட்கார்ந்தான் அவன்.

அடுத்த கணத்தில்—

அவன் அலறிய அலறலில்

அந்த பங்களாவே அதிர்ந்தது!

அவள் பரபரப்போடு எழுந்து,

நிமிர்ந்து,

திரும்பினுள்.

அவன் துடி துடி துடி துடி துடித்துக்கொண்டு கிடந்தான்!

தி-கை-ப்-பா-க-

இருந்தது

அவளுக்கு!



## பூனேமீது வழக்கு!

✣ அமெரிக்காவில் சீட்டில் நகரில் வசித்தவர் சார்லஸ் அண்டர்சன் (வயது 83) இவருக்கு ஒரு மகனும் இரண்டு வளர்ப்பு மகளும் இருக்கிருர்கள். ரஸ்தஸ் என்ற ஆண் பூனேயையும், லூசி என்ற பெண் பூனேயையும் இவர் வளர்த்தார்.

அண்டர்சன் தன்னுடைய உயிலில் 2 பூனேகளுக்கும் ரூ. 2 லட்சத்து 62 ஆயிரம் மதிப்புள்ள பங்களாவையும், ஏராளமான சொத்துக்களேயும் எழுதிவைத்துள்ளார். மகனுக்கும், மகளுக்கும் ஏழரை லட்சம் ரூபா சொத்து கொடுத்துள்ளார்.

அண்டர்சன் இறந்த பின்னர் இரண்டு பூனேகளும் அந்த பங்களாவில் வசித்து வருகின்றன. அவைகளேக் கவனித்துக் கொள்ள ஒரு உதவியாளர் இருக்கிருர்.

பூனேகளே வெளியேற்றிவிட்டு அவைகள் வசிக்கும் பங்களாவையும், மற்ற சொத்துக்களேயும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அண்டர்சனுடைய மகனும், மகள்களும் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்துள்ளார்கள். வழக்கு விசாரணே தொடர்ந்து நடக்கிறது.

அவனது அலறலும் துடி துடிப்பும் அடங்கவில்லை.

ஒரு சில நிமிடங்களுக்கு அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவனுடைய கண்கள் செருகின. மூக்கில் வியர்த்தது. முகத்தின் நிறம் மாறத்தொடங்கிக்கொண்டிருந்தது.

அவள் டெலிபோனை நோக்கி ஓடினுள்.

✱

இரண்டு நாட்கள் கழித்து.


அந்த எஸ்டேட்டிலிருந்து பதினைன்கு மைல் தூரத்தில் இருந்த ஆஸ்பத்திரியில் அவனுக்கு உணர்வு வந்தபோது அவனுக்குப் பக்கத்தில் நின்ற அந்த ஆஸ்பத்திரியின் பெரியவர், மிகப் பெரியவர், பேசுவது மிக மெதுவாக, ஆனுல் தெளிவாக, அவன் காதுகளிலும் கேட்டது.

''பிழைத்துக் கொள்வான். முதலில் கடவுளுக்கும் பின்னர் அவளுக்கும்தான் இவன் நன்றி சொல்ல வேண்டும். 'சிரிஞ்'சில் இருந்த ஊசி இவனது தொடைகளிலேயே முறிந்துவிட்டது. அதுகூட அவ்வளவு 'டேஞ்சர்' அல்ல. ஆனுல் அதிலிருந்த மருந்து இவனுக்கு 'டெட்லி அலர்ஜிக்'! அவள் உடனடியாக எங்களுக்கு அறிவித்ததோடு, இவனுக்கு தகுந்த முதலுதவியும் அளித்திராவிட்டால் இவன் தப்பியிருக்கவே முடியாது''

அதே நேரத்தில்,

அவள் .........

—ஐயா, வாசகரே; இது சரியல்ல. இந்தக்கதையில் அவளின் பங்கு இவ்வளவுதான். இனி அவ்ள் என்ன செய்தால் உமக்கென்ன? அவனே அவளைப்பற்றிய சிந்தனைகளை விட்டுவிட்டான். நீர் விடமாட்டாட்டீர் போல் இருக்கிறதே! ●



✣ பத்மினி பிச்சர்ஸ் தயாரித்த ''கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி'' என்ற படத்தில் சிவாஜியும், டி. ஆர். ராமச்சந்திரனும் நடித்தார்கள். இந்தப் படத்தைத் தயாரித்தவர் பி. ஆர். பந்துலு. இந்தப் படத்தில் சிவாஜியைக் காட்டிலும் டி. ஆர். ராமச்சந்திரனுக்கே அதிக தொகை நடிப்புக் கூலியாகக் கொடுக்கப்பட்டது.

✣ பல்வேறு இனத்தவர்கள் ஐக்கியமாக வாழ்ந்து வரும் இடங்களுள் ஹேவஹெட்டையும் ஒன்று, இந்துக்கள், பௌத்தர், கிறிஸ்தவர், இஸ்லாமியர் என்ற எல்லாச் சமயத்தவரும் இந்தப் பகுதியில் வாழ்கிருர்கள் இங்குள்ள சுப்பிரமணியர் ஆலயம் இந்துக்கள் மட்டுமல்லாது பிற சமயத்தவரும் சென்று வணங்கும் தலமாக இருந்து வருகிறது.

✣ இந்தியாவிலேயே மிகப் பெரும் வருமானம் உடையவர் யார் தெரியுமா? - திருப்பதி ஏழுமலையான்தான். இவருக்கு வரும் வருமானம் வேறு யாருக்குமே இல்லை.

✣ மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் 223 பிரிவுகளும், 250 பரிசோதனைக் கூடங்களும் இருக்கின்றன. பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சி உதவியாளர்கள் ஆகியோரது எண்ணிக்கை 3,700 ஆகும்!

✣ ஆபிரகாம் கோவூர் இலங்கையிலுள்ள உற்சாகம் மிக்க பகுத்தறிவாளர்களுள் முதன்மையானவர். பேய், பிசாசு, மந்திரம், மாயம் என்பன போன்ற மூட நம்பிக்கைகளை ஒழித்துக்கட்டவேண்டும் என்பதற்காக ஒருவித வேகத்துடன் இவர் செயல்பட்டு வருகிறார். இப்போது சிங்கள மக்களுக்கு நன்கு அறிமுகமானவராயிருக்கும் இவர் ஒரு இந்தியர்; இவரது தாய்மொழி மலையாளம். பிழைக்க வந்த இலங்கையையே இப்போது தனது தாயகமாக்கிக்கொண்டுவிட்டார்! மலையாளிகள் வலு கெட்டிக்காரர்கள்!

✣ சோவியத் ஆட்சி ஏற்பட்டபோது ரஷ்யாவின் கல்விநிலை மிகவும் மோசமாக இருந்தது. அறியாமை நோயை அப்படியே விட்டுவைத்தார்களா சோவியத் தலைவர்கள்? இல்லை; அதையே முதலில் ஒழித்தார்கள். முதியோர்க்கெல்லாம் எழுத்தறிவு ஊட்டிய பிறகே மற்றவர்க்கு மற்றக் கல்விக்குப் பெருமுயற்சி எடுத்தார்கள். வெற்றிபெற்றார்கள். பத்தாண்டு காலத்தில் ஐம்பது வயதுக்கு உட்பட்ட எல்லோரையும் எழுத்தறிவு பெற்றவர்களாக்கி விட்டே மறுவேலை பார்த்தார்கள்!

✣ அறுவை சிகிச்சை மூலம் உடலுக்கு இளமையைக் கொடுக்கும் கலையில் இப்போது ஜப்பான் முன்னேறிக்கொண்டு வருகிறது. ஆனால், இதில் முன்னணியில் இருக்கும் நாடு அமெரிக்காதான்! முகத்திலும் அங்கங்களிலும் இருக்கும் ஒரு சில குறைபாடுகளை நீக்கி அழகு பெறுவதற்கென்று கண்டு பிடிக்கப்பட்ட இந்த அறுவை சிகிச்சைமுறை தற்போது பெரும்பாலும் வயது முதிர்ந்த கிழட்டுப் பெண்களுக்கு இளமையைத் திருப்புவதற்கே பயன்படுகிறது. சென்னையிலுள்ள சில தமிழ் சினிமா நடிகைகளுங்கூட இந்த சிகிச்சைக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்ற வதந்தி இப்போது சினிமா வட்டாரங்களில் அடிபட்டு வருகிறது!

✣ மின்னல் வேகத்தில் உலகம் முன்னேறி வருகிறது. ஆனால் நமது நாட்டிலோ - இலங்கை அனைத்திலுமுள்ள பாடசாலைகளில் ஆக மொத்தம் 895 விஞ்ஞான பட்டதாரிகள் மட்டுமே ஆசிரியர்களாக இருப்பதாக கல்வி இலாகாவின் அறிக்கை ஒன்று கூறுகின்றது. நிலைமை இப்படி இருந்தால் எங்கள் பிள்ளைகள் முன்னேறுவது எப்படி? எங்கள் நாடுதான் வளர்ச்சி அடைவது எப்படி?

✣ மொத்தத்தில் இந்தியாவில் கல்லாதவர்களே அதிகம். நூற்றுக்கு முப்பதுபேரே எழுதப் படிக்கத் தெரிந்தவர். ஆண் பெண் என்று பிரிப்பதானால் நூற்றுக்கு நாற்பது ஆணும் இருபது பெண்ணுமே படிக்கத் தெரிந்தவர்கள். திருப்தியான நிலையா இது? இல்லை, படுமோசமான நிலைமை!



✣ சினிமா நடிகைகள் நாய் வளர்ப்பது சர்வசாதாரணம். நாய் வளர்ப்பது ஒரு 'நட்சத்திர ஃபாஷன்! ஆனால் சரோஜாதேவி நாய் வளர்ப்பதில்லை. நாய்களைக் கண்டாலே அவருக்குப் பிடிப்பதில்லை. ஆனால், அவருடைய கணவர் நாய் வளர்க்கிறார். சரோஜாதேவி அந்த நாயின் பக்கமே திரும்பிப் பார்ப்பதில்லை!

✣ வளர்ப்புத் தொட்டியிலுள்ள மீன்களில் ஒன்று நோயினால் இறந்துவிட்டால் உடனே அம்மீனை அகற்றிவிடுவதுடன் தொட்டியிலுள்ள நீரையும் மாற்ற வேண்டும். இல்லையேல் மற்ற மீன்களையும் நோய் பாதித்துவிடும். 'குளோரின்' கலந்த குளாய்த் தண்ணீரைத் தொட்டியில் நிரப்பக்கூடாது. 'குளோரின் மீன்களுக்கு ஒத்துக்கொள்வதில்லை!

✣ தி. ஜ. ர. என்றபிரபல எழுத்தாளர் (திங்களூர் ஜகத்ரக்ஷக ரங்கநாதன்) நான்காம் வகுப்புவரைதான் பாடசாலையில் படித்தவர்; ஆங்கிலத்தைத் தாமாகவே படித்துக் கொண்டவர். ஆனால், சிறந்த மொழிபெயர்ப்பாளர். உதாரணமாகச் சொல்லக்கூடிய அளவு ஆங்கில நூல்கள் சிலவற்றை இவர் மொழிபெயர்த்திருக்கிறார்! இவருடைய மகன் ரேடியோ என்ஜினியரிங் படிப்பதற்காக தபால் மூலம் பாடங்களைப் பெற்றார்; அவற்றை தி. ஜ. ர. படித்து ஒரு சிறந்த ரேடியோ மெக்கானிக் ஆகவும் விளங்குகிறார். ரேடியோ பாடங்களை வரவழைத்த இவருடைய மகனுக்கு இந்த மெக்கானிஸம் தெரியாது. அவர் பாதியிலேயே படிப்பை நிறுத்தி விட்டார்!

✣ தந்தியை விட வேகமாகச் செல்லக்கூடியது வதந்தி! தந்தி வசதிகள் இல்லாத நாட்களில் வதந்தியின் வேகம் இரண்டு மடங்காகி விடுகிறது! ஆனால்ஒரு விஷயம்-வதந்தியைப் பரப்புகின்றவன் முட்டாள்! வதந்தியை நம்புகிறவன் படுமுட்டாள்!

✣ சுப்ரீம் கோர்ட் ஜூரி சேவைக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு 'வேண்டுகோள்' வருவதில்லை நீதியரசரின் கட்டளைதான் வரும். அவர்கள் அதை மறுக்கக் கூடாது. 'சுகயீனம்' போன்ற தக்க காரணமின்றி அவர்கள் குறித்த நேரத்தில் நீதித்தலத்திற்கு சமுகம் கொடுக்காமல் விடுவது ஒரு குற்றமாகும். இதே போலத்தான் பிரிட்டிஸ் அரசி எலிசபெத் நடத்தும் விருந்துபசாரத்துக்கு அழைப்பு கிடைத்தவர்களும், அதை ஏற்காது விருந்துக்குப் போகாமல் விட்டால் அவர்கள் மகாராணியை அவமதித்த குற்றச்சாட்டுக்கு ஆளாவார்கள்!

## ஆர். ஆர். தர்மரத்தினம்

உடுப்பிட்டி கிராமசபையில் சென்ற பதினைந்து வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து தலைவராகக் கடமையாற்றுபவர் ஆர். ஆர். தர்மரத்தினம்! இவர் ஒரு பிரம்மச்சாரி ! லங்கா சமசமாஜக் கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவர்! கிராம சபைத் தலைவருக்கென ஒதுக்கப்படும் 'அலவன்ஸ்' பணத்தில் ஒரு சதம்தானும் எடாமல் கடமை புரியும் இவரைப்போல் இலங்கையில் வேறுயாரும் இருப்பதாகத் தெரியவில்லை !

— இ. திருநாவுக்கரசு
வல்வெட்டித்துறை

## பலே, கருணாநிதி!

இந்திய மாநில முதலமைச்சர்களில் கருணாநிதிதான் மத்திய அரசில் அதிக செல்வாக்கைப் பெற்றிருக்கிறார். தேர்தலுக்கு முன் இந்திராவின் பலவீனத்தை வைத்து கேட்டதெல்லாம் பெற்றார். இப்போது மாநில சுயாட்சிக் கோரிக்கையை வைத்துக் கேட்டதெல்லாம் பெறுகிறார். சமீபத்தில் இந்திய விமானம் ஒன்றுக்கு தமிழ் மன்னன் பெயர் சூட்டப்பட்டது இதற்கு ஓர் உதாரணம்!

எம். மரியதாஸ்,
ஆனைக்கோட்டை.

## கிணறு காவுவார்கள்?

'கிணறு காவிகள்' பற்றிய கேலிக் கதையை யாழ்ப்பாணப் பகுதியில் கேட்டிருக்கிறோம். ஆனால் சுவிர்ச்சலாந்து நாட்டில் உண்மையிலேயே ஐந்து மாடிக் கட்டிடத்தையே பெயர்த்தெடுத்துக் கொண்டுபோய் வேறு இடத்தில் வைத்திருக்கிறார்கள்! கட்டிடத்தை நவீன யந்திரங்களின் உதவியால் அத்திவாரத்தோடு அகழ்ந்தெடுத்து, அதற்குச் சக்கரங்களை மாட்டி அப்படியே தள்ளிக்கொண்டு போய், ஏற்கெனவே தயாராக வைத்திருந்த பிறிதோரிடத்தில் நிறுத்தியிருக்கிறார்கள். விஞ்ஞானிகள் நினைத்தால் கிணறுகளையும் காவி விடுவார்கள்!

புலோலி, சி, தர்மகுலசிங்கம்.

## தமிழ் 'சம்பத்'

'தேசிய லொத்தர் சபை' டைரக்டர் வி. பி. சீவரத்தினம், 'மகாஜன சம்பத்' என்ற சிங்களப் பதத்துக்குரிய தமிழ்ச் சொல்லை சுவீப் டிக்கட்டில் பொறிப்பது பற்றி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிகிறது. 'மக்கள் ஐஸ்வரியம்' 'மக்கள் சம்பத்து' என்பனபோன்ற பெயர்களைச் சிலர் குறிப்பிடுகிறார்கள்; ஆனால் 'மக்கள் செல்வம்' என்பதுதான் தூய தமிழ்ச் சொல் என்பதை அரச கரும மொழித் திணைக்களம் அறிவுறுத்த வேண்டும்!

சிவா, தமிழ்ஜோதி.
கொழும்பு-14.

## ''சிறை''ஞர் !

பாரதத்தின் முடிசூடா மன்னராக விளங்கிய ஜவாகர்லால் நேரு சுதந்திர பாரதத்தை நிர்மாணிப்பதற்காக ஒன்பது முறை சிறை சென்றிருக்கிறார். ஒவ்வொரு முறையும், வெவ்வேறு சிறைக் கூடங்களில் இவரை அடைத்து வைத்தனர் ஆங்கில ஆட்சியாளர். தமது வாழ் நாளில் 3262 நாள்களை சிறையிலேயே கழித்திருக்கிறார் இவர் !

தொல்புரம். — து. குமார்

✣ 'புதினம்' என்ற வார இதழ் சுமார் இரண்டு வருட காலம் இலங்கையில் மிகப் பர பரப்பாக வெளிவந்தது. அதை வளர்த்து விடவேண்டுமென்று முழு ஆர்வத்தோடு பக்கபல மாக நின்று உழைத்தவர் தாழையடி சபாரத்தினம். அதற்கு முன் 'வீரகேசரி' யில் பணியாற்றி, வேலைநிறுத்தப் போரில் அகப்பட்டு, தோல்வி கண்டு மனம் உடைந்துபோன வர். ஈழத்து எழுத்துலகில் இன் னும் எவ்வளவோ செய்திருக்க வேண்டியவர். அகாலமரணமா னவர். அவருடைய மறைவுக் குப்பின் அவருடைய துணைவி யார் திருமதி மீனு சபாரத்தி னம், தனது கணவரின் சிறு கதைத் தொகுதி ஒன்றை 'புது வாழ்வு' என்ற பெயரில் வெளி யிட்டார். ஆவிகளுக்கு உணரும் சக்தி இருக்குமானல் 'சபா'வின் ஆவி அன்றைய தினம் தனது துணைவியைப்பற்றி ஒரு காவி யமே பாடியிருக்கும்! 'தாழை யடி'யின் இரண்டாது சிறுக தைத்தொகுதி 'மறந்துவிடாதே' சென்றவாரம் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவில் வெளியிடப் பெற்றி ருக்கிறது.

✣ அரசாங்க இலாகாக்களி லும் பொது நிறுவனங்களிலும் சில சமயங்களில் ஏற்படும் பணக்கையாடல்களைப் பார்க் கும்போது வேதனையாக இருக் கிறது. வேலியே பயிரை மேய் வதுபோல இந்தச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. உத்தி யோக தோரணையில் வெளி இடங்களுக்குச் செல்லும் சில அதிகாரிகள் இரட்டிப்பான பணத்தை அரசாங்கத்திட மிருந்து கறந்து விடுகிருர்கள். தவருன பத்திரங்களைச் சமர்ப் பித்து, பொய்யான தகவல் களைக் கொடுத்து, ஏற்படாத செலவுகளுக்குக் காட்டி விடு கின்ருர்கள். பொதுமக்களின் பணம் இவ்வாறு வீணுக்கப் படும்போது வேதனைப்படாது வேறு என்ன செய்ய முடியும்?

'வெள்ளி'

226, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

✣ "கன்னித் தமிழகம் கல்வித் தமிழகம் ஆகவேண்டும்; அதன் விளைவாக கல்வி உலகில் தமி ழகம் இமயம் ஆகவேண்டும்" என்ற பெருவிருப்பத்தோடு செயல்பட்டு வருபவர் இப் போது சென்னைப் பல்கலைக் கழ கத்தின் துணை வேந்தராக இருக் கும் சுந்தரவடிவேலு அவர்கள்! ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பெரும் புலமை பெற்ற இவர் இரு மொழிகளி லும் சிறந்த முறையில் சொற் பொழிவு நிகழ்த்துவதிலும், எழு துவதிலும், வல்லவர்! இவர் எல்லாக் கட்சியினருக்கும் இனி யவராகி, எல்லாருடனும் நன் கு பழகும் பண்பாளர்!

✣ மலையாள நடிகையான ஷீலா தமிழ்ப் படங்களில் நடிப் பதற்காக சென்னைக்கு வந்தார். ஆனல் எதிர்பார்த்த வரவேற்பு இவருக்குக் கிடைக்கவில்லை. ஷீலா சும்மா இருக்கவில்லை. சென்னையிலிருந்து வெளிவரும் உலகப் புகழ்பெற்ற பத்திரிகை ஒன்றை வெளியிடும் குடும்பத் தைச் சேர்ந்த பிரமுகர் ஒரு வரை காதலித்து(!) திருமணம் செய்து கொண்டார். தமிழ் நாட்டு மேட்டுக் குடியினர் எல்லாரையுமே அதிர வைத்த திருமணம் இது! திருமணத்துக் குப் பின்னரும் நடிக்க விரும்பி, மறுபடியும் மலையாளப் பட உலகில் நுழைந்த ஷீலா இப் போது அங்கே கொடிகட்டிப் பறக்கிருர்!

*எழுதி வந்த கடிதங்கள் சிலவற்றை சுருக்கி, நெருக்கி ..........*

**தமிழ்ப் பஞ்சமா?**

✣ தமிழ்க்கலைஞர் மு. கருணாநிதி தமது மகனுக்கு 'ஸ்டாலின்' என்று பெயர் சூட்டியிருப்பது கேவலத்திலும் கேவலம்! நல்லதாகத் தமிழ்ப் பெயர் ஒன்றும் கிடைக்கவில்லையா இவருக்கு?

கொழும்பு - 12 — 'வசந்தா' நவரத்தினம்

**வருக, வருக 'சுகுமாரா!'**

✣ ஜூன் இதழில் 'சுகுமாரன்' எழுதிய 'காரில் வர இருந்த கட்டழகி' படித்தேன், சுவைத்தேன்; திகைத்தேன், "இப்படி ஒரு 'சுவைக் கதைச் சுகுமாரன்' எங்கள் ஈழத்தில் இருக்கிறாரே, எனக்குத் தெரியாமலே போச்சே!" என்று! தொடர்ந்து எழுத வையுங்கள் அவரை!

கொழும்பு - 4. — எஸ். சிவசாமி

✣ '.. .... கட்டழகி காரிலே வர இருந்தாள்; அதை எழுதிய 'சுகுமாரன்' என் கருத்திலே குடிபுகுந்தார். அடுத்த 'வெள்ளி'யை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன், அவருடைய கதைக்காக!

மட்டக்களப்பு. — க. விநாயகம்

**வாழியோ வாழி!**

✣ ஈழத்தில் உள்ள பத்திரிகைகளில் அனேகமானவை பிந்தி வருகின்றன. ஆனால் வெள்ளியோ முதலாந் திகதியே வெளிவந்து எம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றது. பொழுது போக்குக்காகப் படித்து, அறிவைப் பெற்று, நாலுந் தெரிந்தவராக எம்மை ஆக்கும் 'வெள்ளி'யே நீ வாழ்க! வளர்க!

நெல்லியடி-2. — நெல்லை ஐ. நடேஸ்

✣ உண்மையாகவே ஒரு ஈழத்துக் கல்கண்டு! ஏப்ரல், மே, ஜூன் மூன்று இதழ்களையும் படித்தேன். நல்ல தரம்; நல்ல சுவை! மேலும் வளர வாழ்த்துகின்றேன்!

பசறை — அ. வ. தியாகராசா

**கேட்கப்போகிறோம் 'கேள்வி'!**

✣ 'வெள்ளி' பத்திரிகை உலகில் ஒரு புதுமை செய்துவிட்டது. புதுமையான அமைப்பு, கருத்துக்களில் எழுச்சி, இவையெல்லாம் வெள்ளியை ஓர் இலட்சிய ஏடாகவே எடுத்துக் காட்டுகின்றன. 'கேள்வி - பதில்' பகுதியையும் துவக்கினால் மிக நன்றாக இருக்கும்.

உடுப்பிட்டி. — பி. யோகானந்

✣ 'வெள்ளி' ஒரு நல் விருந்து. 'கேள்வி—பதில்' பகுதியையும் சேர்ப்பீர்களானால் விருந்தின் சுவை உயரும்!

கொட்டாஞ்சேனை. சு. ப. ஐயர்

**தணிக்கை!**

✣ 'நாலும்' தெரிய வைக்க எழுந்த 'வெள்ளி', 'நாலும்' தெரிய நடிக்கும் நட்சத்திரங்கள் பற்றியே தெரிய வைக்கக் கங்கணம் கட்டி நிற்பதேனோ? ஜூன் இதழில் இருபதுக்கு மேற்பட்ட செய்திகள் சினிமாவைப் பற்றியவையே!

கலட்டி. — பி. கனகரத்தினம்

✣ சினிமாவைப்பற்றி ஏதும் இருந்தால்தான் இக்கால இளைஞர்கள் பத்திரிகையை வாங்குவார்கள் என்ற உண்மையை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்.. ......ஆனால் அதிலேயே மூழ்கிவிடாதீர்கள். ஒரு 'பேர்சன்டேச்' வைத்துக் கொள்ளுங்கள்!

கண்டி. — எம். காந்திமதி

VELLI—Tamil Monthly Vol. 1 No. 4 July 1971

ஆங்கிலம் பயிலும் மாணவருக்கு
மிகச் சிறந்த
உதவி நூல்:

வரதரின்

# மாணவர் அகராதி

[ஆங்கில - ஆங்கில - தமிழ்]

VARATHAR

# STUDENT'S DICTIONARY

(English - English - Tamil)

விலை ரூபா 5/—

வரதர் வெளியீடு,

226, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்